**கவனிக்க.**- *21.06.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1817 - 2013 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2013.06.28

*1817 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1630 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1638 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1638 |


**கவனிக்க.**- (i) கே.டீ.எம்.சந்திரா பண்டார சமுதாய சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) அக்குறனை ஜாமீஆ ரஹ்மானியா அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல் ) சட்டமூலம் 2013,மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூலை மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## களுத்துறை நகர சபை

களுத்துறை நகர சபையில் உள்ள கீழ்க்காணும் வெற்றிடங்களுக்காக இந்த அறிவித்தலின் பிரகாரம் தகைமைகளுடைய மேல் மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பிடமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஏற்கனவே இந்த சபையில் சேவை புரிகின்ற பதிலீடு மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான விண்ணப்பதாரிகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்.

| தொடர் இல. | பதவிப்பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள முறை | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் | ஆட்சேர்ப்பு முறை |
|---|---|---|---|---|---|
| 1. | சுகாதாரத் தொழிலாளர் III | 13 | ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ.17,600/- ஆரம்ப சம்பள அளவு (அ.நி.சு. 6/2006 iv இன் பிரகாரம் PL 1-2006 A ) | கல்வித் தகைமைகள் கவனத்தில் கொள்ளப் பட மாட்டாது. | நேர்முகப் பரீட்சைக் குழு வினால் தகைமைகள் பரிசோதிக்கப்படுவதன் மூலம். |
| 2. | விளையாட்டு மைதான பொறுப்பாளர் III | 1 | ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ.17,600 ஆரம்ப சம்பள அளவு (அ.நி.சு.6/2006 iv இன் பிரகாரம் PL 1-2006 A ) | குறைந்த பட்சம் 08 ஆம் தரம் /9ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் | கட்டமைக்கப்பட்ட நேர் முகப் பரீட்சை ஒன்றின் மூலம். |
| 3. | இயந்திர செயற்பட்டாளர் II (பெக்கோ லோடர்) | 1 | ரூ. 12,470-10×130-10×145-10×160-12×170 - ரூ.18,860/- ஆரம்ப சம்பள அளவு (அ.நி.சு.6/2006 iv இன் பிரகாரம் PL 3-2006 A ) | 1. குறைந்தபட்சம் 08 ஆம் தரம் /9ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் (உள்ளக விண்ணப்ப தாரர்களுக்கு )<br>2. க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஏதாவது இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (வெளி விண்ணப்பதாரர்களுக்கு) முதலில் உள்ளக விண்ணப்பதாரர்கள் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதுடன் அவ்வாறு அவர்களிடம் தகைமைகள் இல்லை என்றால் வெளி விண்ணப்பதாரர்கள் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.<br>தொழில்சார் மற்றும் ஏனைய தகைமைகள்:-<br>(i) வெற்று வாகன நிறை ஹொன்டர் 34 இற்கு அதிகமான நிறையுடைய மோட்டார் வாகனம், கனரக ரேலர் மற்றும் 32 இற்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப் பத்திரம் உள்ள பஸ் வண்டி ஓட்டுவதற்கான மோட்டார் வாகன | வாய்மூல மற்றும் செய் முறைப் பரீட்சைகள் மூலம். |

| தொடர் இல. | பதவிப்பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள முறை | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் | ஆட்சேர்ப்பு முறை |
|---|---|---|---|---|---|
| | | | | போக்குவரத்து ஆணை யாளரினால் வழங்கப் பட்ட தேர்ச்சி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>(ii) குறைந்த பட்சம் உயரம் 5 அடி 06 அங்குலம் இருத்தல் வேண்டும்.<br><br>(iii) இணைத்து கொள்வ தற்கு உத்தேசிக்கும் பதவியுடன் தொடர் புடைய கனரக இயந்திரம் இயக்குதல் தொடர்பாக அரசாங்க அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து குறைந்த பட்சம் ஒரு வருடத் திற்கு குறையாத தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். (ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் என்பது அரச நிறுவனம், மாகாண அரச நிறுவனம், பகுதியள விலானஅரச நிறுவனம், உள்ளூராட்சிமன்றம் அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனம் ஆகியவைகளாகும்.)<br><br>(iv) மோட்டார் இயந்திர வியல் பற்றிய அடிப் படை அறிவு இருத்தல் வேண்டும். | |
| 4. | நூலக உதவியாளர் II | 1 | ரூ. 11,730-10×120 -10×130-10×145- 12×160-ரூ.17,600/- (அ.நி.சு.6/2006 iv இன் பிரகாரம் PL 1-2006 A ) ஆரம்ப சம்பள அளவு ரூ. 13,060/- | க.பொ.த.(சா.த) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது ஆறு பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (உள்ளக மற்றும் வெளி விண்ணப்பதாரர்களுக்கு)<br><br>வீதி மற்றும் சுகாதார தொழிலாளர்களுக்காக 08ஆம் தரம் அல்லது 09 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் |

| தொடர் இல. | பதவிப்பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள முறை | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் | ஆட்சேர்ப்பு முறை |
|---|---|---|---|---|---|
| | | | | (முதலில் உள்ளக விண்ணப்பதாரர்கள் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதுடன் அவ்வாறு அவர்களிடம் தகைமைகள் இல்லை என்றால் வெளி விண் ணப்பதாரர்கள் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படும். | |
| 5. | காவலாளர் II | 04 | ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ.17,600 (அ.நி.சு.6/2006 iv இன் பிரகாரம் PL 1-2006 A ) ஆரம்ப சம்பள அளவு ரூ.13,060 | (i) க.பொ.த.(சா.த) பரீட்சை யில் ஒரே தடவையில் ஏதாவது ஆறு பாடங்கள் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (உள்ளக மற்றும் வெளி விண்ணப்ப தாரர்களுக்கு )<br>(ii) வீதி மற்றும் சுகாதார தொழி லாளர்களுக்காக 08 ஆம் தரம் அல்லது 09 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>(முதலில் உள்ளக விண்ணப்ப தாரர்கள் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதுடன் அவ்வாறு அவர்களிடம் தகைமைகள் இல்லை என்றால் வெளி விண் ணப்பதாரர்கள் மூலம் வெற்றி டங்கள் நிரப்பப்படும். | நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் |
| 06. | வேலை/ கள தொழிலாளர் III | 16 | ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ.17,600 | 5 ஆம் தரம் /6 ஆம் ஆண்டு சித்திபெற்றிருத்தல் வேண்டும். | நேர்முகப் பரீட்சை குழுவி னால் தகைமை கள் பரிசோதிக் கப்படுவதன் மூலம் |

**02. ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்.-**

(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு அண்மித்த 03 வருடங்களுக்கு குறையாத காலம் விண்ணப்பதாரி மேல் மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பிடமுடையவராய் இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு வயது வருடங்கள் 18 இற்குக் குறையாதும் 45 இற்கு அதிகரிக்காதும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை உரித்தாகாது.)

(4) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தையுடையவராகவும் சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(5) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட ஒருவராய் இருத்தலாகாது.

(6) விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படுகின்ற காலத்தினுள் மேல் மாகாணத்தில் இந்த பதவிகளுக்குரிய புதிய ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிமுறை திருத்தம் செய்யப்படுதல் மற்றும் ஒழுங்குவிதிமுறை பதிலீடு செய்யப்படுதல் ஆகியவற்றின்கீழ் இந்த அறிவித்தல் செய்யப்படுகின்றது.

03. தகைமைகள் உடைய விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள் என்பதுடன் கீழ்க்காணும் ஆவணங்கள் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்விச் சான்றிதழ்கள் ;

(3) தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்று ;

(4) வதிவு தொடர்பாக பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கிராம சேவகரின் சான்றிதழ் ;

(5) அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்.

04. இந்த அறிவித்தலில் உள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் ஏ4 அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2013.07.15 ஆந் திகதிக்கு முன்னர் செயலாளர், களுத்துறை நகர சபை எனும் விலாசத்திற்கு கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். (ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்). உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**கவனத்தில் கொள்ளவும்.**- இவ்வறிவித்தலை திருத்தம் செய்யும் அல்லது பிற்போடும் அல்லது இரத்து செய்யும் சகல அதிகாரங்களும் களுத்துறை நகர சபையின் செயலாளருக்கு உரித்தானது.

நெலு நிசாந்தி இத்தகொட,
செயலாளர்,
களுத்துறை நகர சபை.

2013.06.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரச சேவை**

**களுத்துறை நகர சபை**

................................ பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
2. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
3. நிரந்தர விலாசம்:----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. ஆண்/பெண் :----.
6. பிறந்த திகதி :----.
   ................ திகதிக்கு வயது :- வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
7. இலங்கைப் பிரசையாகுவது பிறப்பின் மூலமா? பதிவின் மூலமா? :----.
8. கல்வித் தகைமைகள் (சித்தி பெற்றுள்ள பரீட்சைகள் பற்றிய விபரங்கள்) :----.
   (i) சித்திபெற்றுள்ள அதிகூடிய ஆண்டு/தரம் :-
   (ii) க. பொ. த. (சா. த.) பரீட்சை :-
   சுட்டெண் :-
   பரீட்சை ஆண்டும் மாதமும் :-
   சித்திபெற்ற பாடங்கள்

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |

   (iii) க. பொ. த. (உ. த.) பரீட்சை :-
   சுட்டெண் :-
   பரீட்சை ஆண்டும் மாதமும் :-
   சித்திபெற்ற பாடங்கள்

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |

9. திருமணமானவரா/திருமணமாகாதவரா? :----.
10. நீங்கள் ஏதும் குற்றமொன்று தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :----.
11. கல்வித் தகைமைகள் :----.

12. நீங்கள் ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் கடமை புரிபவர் என்றால் அந்த சேவைக்காலம் மற்றும் விபரம் :----.
13. அனுபவமும் ஏனைய தகைமைகளும் :----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என கௌரவத்துடன் உறுதிமொழிகிறேன். மேற்குறிப்பிடப்படும் தகவல்கள் பிழையானவை என நிரூபிக்கப்பட்டால் நான் சேவையில் இணைத்துக்கொள்ள முன்னர் தகுதியற்றவறாவேன் எனவும், நியமனம் பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**(ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் கடமை புரிகின்ற விண்ணப்பதாரிகள் என்றால் கீழ்க் காணும் சான்றிதழ் திணைக்களத் தலைவரினால் வழங்கப்படுதல் வேண்டும்.)**

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................................................... அவர்கள் தற்பொழுது இந்த நிறுவனத்தில் ............................ சேவை புரிகின்றார். கடந்த வருடங்களினுள் இவர் சகல சம்பள படியேற்றங்களையும் பெற்றுள்ளார். இவர் எந்த விதத்திலும் ஒழுக்காற்று நடவடிக்கையினால் தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) உட்படுத்தப்படாதவர் எனவும் நியமனமொன்றுக்காக இவர் தெரிவுசெய்யப்பட்டால், இவர் வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது மற்றும் சரியானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள
அதிகாரியின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
திகதி :----.
திணைக்களம்/நிறுவனம் :----.

6-739

---

## மத்திய மாகாண சபையின் கடுகண்ணாவை நகர சபையில் ஆரம்பத்தரப் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

மத்திய மாகாண சபையின் கடுகண்ணாவை நகர சபையில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கென கீழே தரப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள கண்டி மாவட்டத்தில் நிரந்தர வதிவைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2013.05.21, 2011.12.23, 2009.07.29 ஆகிய திகதிகளில் அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண அரச சேவையின் ஆரம்பத்தர தேர்ச்சியுள்ள, குறை தேர்ச்சியுள்ள, தேர்ச்சியற்ற பதவியணியினருக்கான சேவை யாப்பின் கீழான ஆட்சேர்ப்பு.

| பதவிப்பெயர் | தரம் | பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித்தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 01. வாகன ஓட்டுநர் | III | ஆரம்பத்தரம் தேர்ச்சியுள்ள | 01 | பொ. நி. சு. 6/2006 (IV) PL-3 ரூ. 12,470-10×130-10×145 - 10×160-12×170- ரூபா 18,860 | 01. இரு தடவைக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) அல்லது தேசிய கல்விச்சான்றிதழ் சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட ஆறு பாடங் களில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இவற்றில் 05 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**தொழில் மற்றும் ஏனைய தகைமைகள்**<br>01. ஆட்சேர்ப்பு தினத்துக்கு 03 வருடங்க ளுக்கு முன்னர் (குறைந்தது) மோட்டார் போக்குவரத்து |

| பதவிப்பெயர் | தரம் | பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித்தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | ஆணையாளரால் வழங்கப்பட்ட ஏ தர வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் அல்லது புதிய முறையின்படி பி தர வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்.<br>02. வாகன ஓட்டுநராக 03 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். (சேவைச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்)<br>03. வீதிப்போக்குவரத்து வீதிகள் பற்றிய நல்ல அறிவு இருத்தல் வேண்டும். |
| 02. தகனசாலை இயக்குபவர் | III | ஆரம்பத்தரம் குறை தேர்ச்சி | 01 | பொ. நி. சு. 6/2006 (iv) - PL-2 ரூ. 12,210-10×130-10×145 - 10×160-12×170- ரூபா 18,600 | 01. இரு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) அல்லது தேசிய கல்விச்சான்றிதழ் சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட ஆறு பாடங் களில் குறைந்தது இரண்டு திறமை சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>தொழில்நுட்ப தேர்ச்சி பற்றிய சான்றிதழ் விசேட தகைமையாகக் கொள்ளப்படும். |
| 03. காவற்காரர் | III | ஆரம்பத்தரம் தேர்ச்சியற்ற | 01 | பொ. நி. சு. இல. 06/2006 - PL-01 ரூ. 11,730-10×120-10×130 - 10×145-12×160- ரூபா 17,600 | 01. இரு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) அல்லது தேசிய கல்விச்சான்றிதழ் சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட ஆறு பாடங் களில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 04. தகனசாலை இயக்குபவரது உதவியாளர் | III | ஆரம்பத்தரம் தேர்ச்சியற்ற | 01 | பொ. நி. சு. இல. 06/2006 - PL-01 ரூ. 11,730-10×120-10×130 - 10×145-12×160- ரூபா 17,600 | 01. இரு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) அல்லது தேசிய கல்விச்சான்றிதழ் சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட ஆறு பாடங் களில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 05. வேலை/ வெளிக்களத் தொழிலாளர் | III | ஆரம்பத்தரம் தேர்ச்சியற்ற | 05 | PL-01 ரூ. 11,730-10×120-10×130 - 10×145-12×160- ரூபா 17,600 | குறைந்தது தரம் 8 (ஆண்டு 9) இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| 06. சுகாதாரத் தொழிலாளர் | III | ஆரம்பத்தரம் தேர்ச்சியற்ற | 01 | பொ. நி. சு. இல. 06/2006- PL-01 ரூ. 11,730-10×120-10×130 - 10×145-12×160- ரூபா 17,600 | குறைந்தது தரம் 8 (ஆண்டு 9) இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

02. **ஆட்சேர்ப்பு முறை.-**

(i) வாகன ஓட்டுநர் பதவிக்கு விண்ணப்பித்தோரைத் தவிர ஏனைய விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு ஆட்சேர்க்கப்படுவர்.

(ii) வாகன ஓட்டுநர் பதவிக்காக விண்ணப்பித்தோர் எழுத்துப் பரீட்சையொன்றின் மூலம் பெறப்பட்ட ஆகக்கூடிய புள்ளிகளின் அடிப்படையில் தொழில் செயன்முறைத் தேர்வின் பெறுபேறுகளின்படி தேவையான அனைத்து தகைமைகளையும் கொண்டுள்ளோரிலிருந்து தேர்ச்சியை மையமாகக் கொண்ட ஆகக்கூடிய புள்ளி அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**03. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.-**

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை. அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) மேலும், அரச சேவை நியமங்களுடன் தொடர்பான பொது நிபந்தனைகளில் கவனம் செலுத்தப்படும்.

(iii) தெரிவுசெய்யப்படுவோர் மூன்று வருடகாலத் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுவர். அக்காலத்துக்குள் சேவை, நடத்தை, வரவு என்பவை திருப்திகரமானதாக இல்லாதுவிடின், சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

(iv) ஏற்கனவே மத்திய மாகாண அரச சேவையில் பதவி வகிப்போருக்கு ஒரு வருடம் மட்டும் பரீட்சிப்புக் காலமாக அமையும்.

**04. ஏனைய பொது நிபந்தனைகள்.-**

(i) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் பதவி வகிப்போருக்கு இந்த உச்ச வயதெல்லை பொருந்தாது.)

(ii) விண்ணப்பதாரிகள் வம்சாவளியாகவோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த நன்னடத்தை உடையவராகவும் நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்பட்டு ஒரு மாத காலத்துக்குள் அரசாங்க மருத்துவர் ஒருவரால் மேற்கொள்ளப்படும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும். மருத்துவ பரிசோதனையில் உடற்தகைமை தகுதியற்றதாகக் காணப்பட்டால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

(iv) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது.

(v) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று கண்டி மாவட்ட எல்லைக்குள் தொடர்ச்சியாக 03 வருடகாலத்துக்குக் குறையாத வதிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வாக்காளர் இடாப்பு அல்லது பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திய வதிவிடச் சான்றிதழ் மூலம் வதிவிடம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்).

(vi) அரச சேவை அல்லது மாகாண அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராகவோ அல்லது பொது நிருவாகச் சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராகவோ இருத்தல் கூடாது.

(vii) அரச அல்லது மாகாண அரச சேவையில் பணியாற்றுவோர் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னருள்ள 05 வருட காலத்துக்குள் தவறுகளுக்கென (எச்சரிக்கை தவிர்ந்த) தண்டனைக்கு உட்படாதவராகவும், சகல சம்பள உயர்ச்சிகளையும் உரிய காலத்தில் ஈட்டிக்கொண்டவராகவும் திருப்திகரமான சேவையைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குத் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(viii) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், அரச திணைக்களங்களது கட்டளைகளுக்கும், மத்திய மாகாண சபை அல்லது கடுகண்ணாவை நகர சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் நிபந்தனைகளுக்கும் அமையச் செயற்படுதல் வேண்டும்.

05. **விண்ணப்பிக்கவேண்டிய முறை.-** இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைய ஏ4 தாளின் இருபுறங்களிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2013, யூலை மாதம் 29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் செயலாளர், கடுகண்ணாவை நகர சபை, கடுகண்ணாவை என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் பணிபுரிவோரது விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவரூடாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.) உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் பூரணமற்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

06. விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும். முதற்பிரதிகள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ்கள் ;
(3) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரது சான்றிதழ் ;
(4) அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் (ஒன்று கிராம அலுவலரது சான்றிதழ்) ;
(5) சேவைச் சான்றிதழ் (ஏற்கனவே அரச சேவையில் உள்ளோருக்கு மட்டும்).

07. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் கடுகண்ணாவை நகர சபையின் செயலாளருக்கு உண்டு.

டபிள்யூ. ஜீ. செனவிரத்ன பண்டார,
பதில் செயலாளர்,
கடுகண்ணாவை நகர சபை,
கடுகண்ணாவை.

கடுகண்ணாவை நகர சபை அலுவலகம்,
கடுகண்ணாவை,
2013.06.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்**

**கடுகண்ணாவை நகர சபை**

................................ பதவிக்கான விண்ணப்பப் படிவம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. பிறந்த திகதி :-
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
6. விண்ணப்ப முடிவுத் திகதியில் உள்ளவாறான வயது :-
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
7. ஆண்/பெண் :----.
8. விவாகமானவர்/தனித்தவர் :----.
9. வம்சாவழியினாலா பதிவினாலா இலங்கைப் பிரசை :----.
10. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க) :----.
    க. பொ. த. சாதாரண தரம்
    சித்தியடைந்த வருடம் : சுட்டெண் :

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |

11. (1) ஏனைய கல்வித் தகைமைகள் :----.
    (2) தொழிற் தகைமைகள் :----.
    (3) சேவை அனுபவம் :----.
12. ஏற்கனவே இந்த நகர சபையில் சேவையில் ஈடுபட்டுள்ளவரெனின் வகிக்கும் பதவி :----.
    நிரந்தரம்/சமயோசிதம்/தற்காலிகம்/ஒப்பந்தம்/பதிலீடு :----.
    அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
13. ஏதேனும் குற்றம் ஒன்றுக்கு நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்தவகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரச சேவையிலுள்ளோருக்கான திணைக்கள தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி .................................................................. என்ற விண்ணப்பதாரி இந்த நிறுவனத்தில் ............................ ஆக பணியாற்றுகிறார். இந்தப் பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்வகையிலான தண்டத்துக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) உட்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தைப் பரிந்துரை செய்கின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
நிறுவனம் :----.
திகதி :----.

6-740

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மத்துகம பிரதேச சபை

*2007 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கம் கொண்ட மேல் மாகாணத்தின் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ சட்டத்தின் 20 ஆம் பிரிவின் 1 ஆவது உப பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு, 1560/6 ஆம் இலக்க 2008 ஆம் ஆண்டின் யூலை மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் IV (அ) ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட மேல் மாகாண இலக்கம் 01 ஐ கொண்ட நகர திண்மக்கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ விதிமுறைகளை மத்துகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமுல்படுத்துவதற்காக, ஏற்று தழுவுவது பொருத்தமானது என 2013 ஆம் ஆண்டின் ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபையில் பிரேரிப்பு, ஆமோதிப்புடன் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. மேலும் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற தினத்தில் இருந்து இந்த விதிமுறை மத்துகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமுல்படுத்தப்படுகின்றது எனவும் மேலும் அறியத்தரப்படுகின்றது.*

எல். ஜி. லியனாரச்சி,
தவிசாளர்.

மத்துகம பிரதேச சபை அலுவலகம்,
2013, மே 30.

6-832

# நானாவித அறிவித்தல்கள்

## திக்வெல்ல பிரதேச சபை

*1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் இலக்கம் 122, 126 (ix) ஆ பிரிவுகள் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 1952 ஆம் அண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் கௌரவ அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட 1988.09.23 ஆந் திகதியின் 520/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட இடைக்காலச் சட்டம் 2008.09.23 ஆந் திகதி திக்வெல்ல பிரதேச சபையின் அங்கீகாரம் பெற்று அதில் குறிப்பிடப்பட்ட 9 ஆம் இடைக்காலச் சட்டத்தின் பிரகாரம், திக்வெல்ல பிரதேச சபையின் அங்கீகாரம் பெற்று அதில் குறிப்பிடப்பட்ட 9 ஆம் இடைக்காலச் சட்டத்தின் பிரகாரம், திக்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லைக்குள், கழிவுகள் சேகரிக்கப்படும் பிரதேசங்களில் கீழ் குறிப்பிடப்படும் அளவுகளில் கட்டணங்கள் அறவிடப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

**கழிவு சேகரிப்பு கட்டணங்கள் அறவிடல்**

| | | ரூபா ச. |
|---|---|---|
| (1) | 06 லீற்றர் முதல் 15 லீற்றர் வரை கழிவகற்றும் நிறுவனமொன்றில் நாளொன்றுக்கு | 50 0 |
| (2) | 15 லீற்றர் முதல் 30 லீற்றர் வரை கழிவகற்றும் நிறுவனமொன்றில் நாளொன்றுக்கு | 100 0 |
| (3) | 30 லீற்றருக்கு அதிகமாக கழிவகற்றும் நிறுவனமொன்றில் நாளொன்றுக்கு | 200 0 |
| (4) | துண்டோடு துகள்கள் கழிவகற்றும் வீடுகள், நிறுவனங்கள் சம்பந்தமாக கீழ்வரும் கட்டணங்கள் அறவிடப்படும். | |
| | துண்டுதுகள்கள் 18.75 கன அடிக்கு (1/4 ட்ரக்டர்) | 200 0 |
| | துண்டுதுகள்கள் 37.5 கன அடிக்கு (1/2 ட்ரக்டர்) | 300 0 |
| | துண்டுதுகள்கள் 37.5 கன அடிக்கு (3/4 ட்ரக்டர்) | 400 0 |
| | துண்டுதுகள்கள் 75 கன அடிக்கு (1 ட்ரக்டர்) | 600 0 |

*கழிவுகள் சேகரிக்கப்படும் புதிய பிரதேசங்களில் அமைந்துள்ள வீடொன்றின் தொலைவிற்கேற்ப குறைந்தது ரூபா 100 இற்கும் கூடியது ரூபா 150 என்ற அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படும்.*

*கிறிசாழி முத்துகுமாரண,*
*தலைவர்,*
*திக்வெல்ல பிரதேச சபை.*

*6-575*

---

**பண்டாரவளை மாநகர சபை**

*புதிய மின் இணைப்பொன்றினை பெறுவதற்கான அனுமதிக் கட்டணம் அறவிடுதல்*

*பண்டாரவளை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும் மின்பாவனையாளர்களினால் பிறிதொரு மின் இணைப்பொன்றை பெறுவதற்காக விண்ணப்பம் செய்யுமிடத்து அதற்காக 1.4.2013 ஆந் திகதி முதல் ரூபா 250 அறவிடப்படுமென 28.03.2013 ஆந் திகதி நடைப்பெற்ற மாநகர சபை விஷேட சபைக் கூட்டத்தில் 5.1 பந்தியின்கீழ் அமுல்படுத்தப்படும் என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*டபிள்யூ. ரண்தெனிய,*
*ஆணையாளர்*
*பண்டாரவளை மாநகர சபை.*

*பண்டாரவளை மாநகர சபை அலுவலகம்.*

*6-615*